Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939,

உ

# இந்துசாதனம்

விரோதி வருஷம் ( 1889 ) ஆவணி மாதம் 28 ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாதில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத். - கூஉ]  யாழ்ப்பாணம்:- கரஉ வைகாசிமீ கரு உ செவ்வாய்க்கிழமை (29 மே 1951) [இல. - கரு]

## ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
# படத்திறப்பு விழா

இளம் வயதிலேயே தமது சன்மவூராகிய யாழ்ப்பாணத்தையும், தமது பெற்றோர் சுற்றத்தார் முதலானோரையும் விடுத்துத் தென்னிந்தியா சென்று, அங்குள்ள சூரியனார்கோயி லாதீனத்தை யடைந்து, அக்காலத்தில அவ்வாதீனத்துப் பண்டாரச் சந்நிதிகளாக விளங்கிய கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்த



ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரானிடத்துத் தென்மொழி வடமொழி நூல்களைச் சந்தேக விபரீதமறப் பயின்று, ஞானோபதேசம் பெற்ற ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் "இலக்கணசாமி" யென்னும் நாமங்களுடன் மகா துறவியாகத் தென்னிந்தியாவிலே தீர்த்த யாத்திரை தலயாத்திரை செய்துகொண்டு சிதம்பரத்தையே தமக்கு வாசஸ்தானமாகக் கொண்டு வாழ்ந்து இற்றைக்கு இரண்டாண்டுகட்கு முன்னர்ச் சிதம்பர தலத்திற்றானே யடங்கிய பெரியாருடைய உருவப்படத் திறப்பு விழா சென்ற வியாழக்கிழமை (24-5-51) பிற்பகல் 5 மணிவரையில் வண்ணார்பண்ணையிலுள்ள கலாநிலைய மண்டபத்தில் நன்கு நடைபெறலாயிற்று. இவ்விழாவிற்கென விசேடமாக அலங்கரிக்கப்பெற்ற கலாநிலைய மண்டபத்தில், மேற்படி கலாநிலையச் செயலாளர் திரு. க. கனகரத்தினத்தின் அழைப்பிற் கிணங்கி, குறித்த நேரத்திற்கு முந்தியே ஆண்கள் பெண்கள் பலர் அங்கு வந்து குழுமினர். மேற்சபை யங்கத்தவர் (ஸெனேற்றர்) கனகநாயகம் அவைத்தலைமை வகித்தனர்; அகில இலங்கைச் சைவ மகாநாட்டின் பொருட்டு அச்சமயத்தில் இங்கு வந்து தங்கிய, சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் என்னுமிருவருள், திரு. சுப்பிரமணிய முதலியாரவர்கள், மேற்படி தம்பிரான் சுவாமிகளின் கல்வித் திறமை, ஞானசாத்திர வுணர்ச்சி, துறவின் றிண்மை, அருள் முதலிய மகத்துவங்களை யெல்லாந் தொகுத்துக்கூறி குறித்த சுவாமிகளின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார். அதன்பின்னர் திரு. முத்து. மாணிக்கவாசக முதலியாரும் மேற்படி தம்பிரான் சுவாமிகளின் பெருமைகளை எடுத்துப் பேசினர்; இரு முதலியார்களும் மேற்படி தம்பிரான் சுவாமிகளே தங்கள் ஞானகுருவானு ரென்பதை எடுத்துச் சபையிற் பயபக்தியோடு சொன்னபோது, சொன்ன அவர்களும் சபையிலிருந்து கேட்டாரெல்லாரும் பரவசமுற்றுத்தத்தம் உள்ளமுருகிப் பெருமித மடைந்தனரெனலாம்; ஈற்றில் இப் பத்திரிகையின் ஆசிரியர் நன்றி கூறினர்; விழா ஆரம்பத்திலும் பூர்த்தியிலும் தேவாரபாராயணம் நடைபெற்றது.

# தோட்டத் தொழிலாளர்
## தொகையைக் கணித்தற்குத் தேசமெங்கும் விசாரணை

இந்திய கூலியாட்களுக்கு இலங்கைக் குடிபதி உரிமைகளைப் பெறக் கொடுத்தற்கு இலங்கை இந்தியக் "காங்கிரஸ்" மிக்க பிரயத்தனப்பட்டு உழைத்துக்கொண் டிருக்கையில், தொழில் மந்திரிப் பகுதியார் இந்திய கூலியாட்களின் தொகையைக் குறித்த விசாரணை நிகழ்த்த ஆரம்பித் திருக்கின்றனர். ஒவ்வோர் தோட்டத்திலு முள்ள தொழிலாளரின் தொகையைத் திட்டமறிதலும், தேவைக்கு மேலதிகமாயுள்ள தோட்டங்களின் ஆட்தொகையைக் குறைத்தற்கு வழிவகைகள் தேடுதலுமே இவ் விசாரணையின் நோக்கமாகும். தொழில் மந்திரிப் பகுதியார் இவ்விவரங்களை வினவுதற் பொருட்டு விசாரணைப் பத்திரமொன்றை அமைத்து அதில் 1600 பிரதிகளைத் தோட்டங்களுக்கு அனுப்பியுள்ளார். பெரும்பாலான தோட்டங்கள் விடைகள் அனுப்பியுள்ளன. எல்லாத் தோட்டங்களும் விடையனுப்பினபின்பு தோட்ட முகாமைக்காரர் கூட்டுறவுச் சங்கத்தாரும் தொழில் மந்திரிப் பகுதியாரும் இவ்விஷயத்தைக் கலந்து ஆலோசிப்பாரென அறியப்படுகிறது. இதுவரையிற் கிடைத்த விடைகளைக் கொண்டு பெரும்பான்மையான தோட்டங்களில் இந்தியக் கூலியாட்கள் தேவைக்கு மேற்பட இருக்கின்றனரென அறியப்படுதலால், அவ்வத் தோட்டங்களில் ஆட்தொகையைக் குறைத்தற்கு உடனே எத்தனங்கள் செய்யப்பட்டாலன்றி, காலகதியில் இச் சனப்பெருக்கம் இடைஞ்சலைத் தருமெனத் தொழில் மந்திரிப் பகுதியார் அபிப்பிராயப்படுகின்றனர். தோட்டங்களில் இந்திய ஆண்பெண்களின் தொகை அதிகரித்ததுமன்றி பிள்ளைகளின் தொகையும் விரைந்து பெருகி வருகின்றதாம், இந்திய வேலையாட்கள் பெருகி வருதலைக் குறைத்தற்கு முயற்சிகள் செய்யப்பட்டாலன்றி தோட்டங்களில் இலங்கை வாசிகட்கு வேலை கொடுக்கும் விஷயத்தில் அதிக இடர்கள் விளையக்கூடுமாம்.

தேவைக்கு மேற்பட்ட இந்திய வேலையாட்களின் தொகை 100.000 க்கு மேற்பட்டதெனவும் வருடந்தோறும் பிறக்கும் இந்திய பிள்ளைகளின் தொகை ஏறக்குறைய 20 000 எனவும் மதிப்பிடப்படுகிறது.

உ
## தோத்திரம்

சோதி வெண்பிறை சூடிய கூடலான்
ஆதி யந்தமி லானெழுத் தஞ்சுடன்
பூதி கண்டிகை யைப்பொருட் கொண்டிடாச்
சாதி யன்றியுண் டோபுலைச் சாதியே

ஒளிபொருந்திய வெள்ளிய பிறைச் சந்திரனை யணிந்து திருவாலவாயின்கண் கோயில் கொண்டவரும் தோற்றமும் முடிவு மில்லாதவருமாகிய சோமசுந்தரப் பெருமானுக்குரிய திருவைந்தெழுத்தோடு விபூதி உருத்திராக்கமென்னுஞ் சிவ சின்னங்களை மெய்ச் சாதனமாகக் கொள்ளாத மக்களே யல்லாமற் புலைச்சாதியென்றொரு சாதியுண்டோ (இல்லை யென்பது பொருள்.

சிவமூலமந்திரமாகிய திருவைந்தெழுத்தையுஞ் சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராக்கங்களையும் மேலான சாதனங்களாகக் கொள்ளாத மக்கள் புலையரிற் புலையராவர் என்றபடி. (77)

# காணிப்பாக்கம்
## தலப்பெருமை

**ஊர்**

காணிப்பாக்கம், சித்தூருக்கு வடமேற்கே 7 மைல் தூரத்திலுள்ளது. இங்கே தனி விநாயகர் கோயில் ஒன்று உண்டு. மூர்த்தியின் பெயர் வரசித்தி விநாயகர். கிழக்குப் பார்த்த சந்நிதி. சந்நிதிக்குமுன் பெரிய திருக்குளம் ஒன்றுண்டு. நவக்கிரகப் பிரதிஷ்டையும் நாகப் பிரதிஷ்டையும் செய்யப்பட்டுள்ளன. மதிற்சுவர்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. பஞ்ச மூர்த்திகளுமுண்டு. பிரம்மோற்சவம் ஆண்டுதோறும் ஆவணித் திங்களில் நடைபெற்று வருகிறது. கோவிலுக்கு அருகில் ஆறுமுண்டு.

**சிவாலயம்**

கொடிமரமில்லை; உள்ளே செல்வதற்குத் தெற்குமுக வாயில். கிழக்குப்பார்த்த சந்நிதி. மூலஸ்தானஸ்வாமி பெயர் - மணிகண்டேச்வரர்; சிவலிங்கம் - துவாதசாந்த குலப்பிரமாணம்; அம்பாள் பெயர் மரகதாம்பிகை; ஸ்வாமிக்கு இடது பக்கம் அம்பாள் சந்நிதி உள்ளது.

ஏனைய மூர்த்திகள் — உட்பிராகாரம்

1 நிருத்த விநாயகர், 2 தக்ஷிணாமூர்த்தி, 3 சித்தி விநாயகர், 4 பிடாரியம்மன், 5 விசுவகர்த்தா, 6 வள்ளிதேவயானை சமேத ஆறுமுகசுவாமி, 7 திருமால், (மேற்கு பார்த்து). 8 பிரம்மா (வடக்கு பார்த்து). 9 சண்டேச நாயனார், 10 துர்க்கை (மஹிஷாசுரமர்த்தனி) 11 பைரவர் (ஆலயத்திற்கு ஈசானத்தில்), 12 சூரியன் (மேற்கு பார்த்து), 13 அகஸ்தியமுனிவர் (வடக்கு பார்த்து) 14 பாலசுப்பிரமண்யர் (தெற்குப் பார்த்து) ஆலயம் மிகவும் பழமையானது. மதிற்சுவர்கள் விழுந்து

**C. N. P சாரதி**

விட்டன. கோவிலுக்கு ஈசான மூலையிற் பெரிய ஏரியுள்ளது. வீர் - தீர்வளம், நிலவளம் பொருந்தியுள்ளது.

**ஏனையவை**

இவ்வூர் சிற்றாறு சென்ற 7 ஆண்டுகளாக சித்தாந்த சைவ வளர்ச்சிக் கழகம் என்ற ஒருசபை நடைபெற்று வருகின்றது; அதை நடத்தி வரும் உயர்தவ சிவானந்த அடிகள் தலயாத்திரை செய்துவந்து அண்மையிலே மேலே கண்ட கோயில்களிலே வழிபாடும் குடமுழுக்கும் இயற்றி "முப்பொருள் உண்மை" என்னும் பொருள்பற்றி விளக்கினார்கள். வூர்மக்கள் பலரும் இக்கழகத்தில் பங்கு எடுத்துக்கொள்கின்றார்கள். — சித்தாந்தம்

## தநுஷ்கோடி - தலைமன்னார் புகைரதம்
### ஞாயிற்றுக்கிழமைகளில் ஓடாவாம்

வருகிற ஜூன் மீ 3 உ தொடக்கம் தநுஷ்கோடிக்கும் தலைமன்னார்ப் பாலத்திற்குமிடையேயோடும் புகைக் கப்பல் ஞாயிற்றுக்கிழமைகளில ஓடமாட்டாதாம்; காரணம் இருநாட்டிற்குமிடையே ஞாயிற்றுக் கிழமைகளில் இந்த மார்க்கமாகப் பிரயாணஞ் செய்வோர்தொகை மிகவுந் தேய்ந்து விட்டமையாம் எனவே இந்தியாவிலிருந்து தநுஷ்கோடிக்கு வரும் புகைரதமும் இங்கிருந்து தலைமன்னாருக்குப் போகும் புகைரதமும் ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் ஓடாவாம். இப்பிரமாணத்தைச் செய்தவர்கள் தென்னிந்திய புகைரத அதிகாரிகளேயாவர்; தநுஷ்கோடிக்குந் தலைமன்னாருக்குமிடையேயோடும் நீராவிக் கப்பலும் அவர்களுக்கே யுரியதாம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ், கர ௵ வைகாசி ௴ கரு உ செவ்வாய்க்கிழமை


## கொலை, தற்கொலை, அவமிருத்து

இந்நாட்டிலே நேருங்கொலைகளுக்கு மூலகாரணம் சடுதியிலுண்டாகுங்கோபம்(ஆத்திரம்), பெண்கள்மேற்கொண்ட காதல் காரணமாகவெழும் பொறாமையெனத் தெரிவிக்கப்படுகின்றது. இப்படியான கொலைகள் பெரும்பாலும் மேன்மாகாணந் தென்மாகாணங்களில் நேர்ந்துள்ளனவாம். வடமத்திய மகாணத்தில் இவ்வாண்டிலே ஒரு கொலையும் நேர்ந்திலதாம். யாழ்ப்பாணப் பகுதியில் இவ்வாண்டில் 9 கொலைகளும், கொழும்பில் நான்கு கொலைகளும் நேர்ந்துள்ளனவாம். இந்த ஆண்டு தொடக்கம் சென்ற ஏப்பிரல் மாசம் 15-ம் தேதிவரையில் இலங்கை முழுவதிலும் நேர்ந்த நரக்கொலை 92 எனக் கணக்கிடப்படுகிறது.

கொலைக்கு அடுத்தது தற்கொலை; இந்நாட்டிலே இக்காலத்திலே தற்கொலை செய்தற்குத்தெரிந்துகொண்ட உபாயம் நச்சுத் திராவகத்தை யுட்கொள்ளுதலேயாகும்; இங்கே நடக்குந் தற்கொலைக்குப் பிரதான காரணங்கள் வாலிபர் யுவதிகள் தாமாகக் கொண்ட காதலுக்கு நேரும் இடையூறு, சகிக்கொணு ரோகத்தாற் பீடிக்கப்படுதல், வறுமையின்கொடுமை; தமக்கு நேர்ந்த அவமானத்தைப் பொறுக்கமுடியாமை, புருஷன் மனைவிக்கிடையே நேரும் பிணக்கு முதலியனவெனலாம்; வீடுபுகுந்து களவெடுக்கும்போது செய்யப்படுங் கொலையும் பலவாகும்.

அவமிருத்துக்கள்பெரும்பான்மையும் புகைவண்டி மோட்டரதம் முதலியவற்றி லகப்பட்டு மாளுதல், நீர்விளையாடும்போது அமிழ்ந்துதல், இடையிடையே காற்றினல் மரம் விழ்ந்தவிடத்தும் தேங்காய் வீழ்ந்தவிடத்தும் பட்டிறத்தலென்னு மிவைகளெனலாம்; அவமிருத்துப் பெரும்பான்மையும் எதிர்பார்த்திராவண்ணஞ் சடுதியில் வந்து நேர்வது; அவதானமாக நடந்தால் இதனையும் இயன்றவரையிலே தடுத்துவிடலாகுமென்பர் நவீன நாகரிகத்தின்பாற்பட்டார்.

சிறிய நாடாகிய இந்த இலங்கையிலே நேருங் கொலை தற்கொலையென்பன, பெரிய நாடாகிய இந்தியாவில் நேருங் கொலைகள் தற்கொலைகளின் விகிதத்தைக் காட்டிலும் மிக அதிகமெனலாம்; இக் காலத்திலே பிறருயிரை அருமையாக மதிக்குங் கொள்கை தேயத்தலைப்பட்டுக்கொண்டது; ஒருவன் தான் செய்யும் கருமத்திற்கு மற்றையவர் இடையூறாகநின்றால், அவனைக் கொன்று அந்த இடையூற்றையொழித்துத் தான் நினைத்ததைச் செய்யத் துணிகிறான். இந்நாட்டிலே கொலைக்குப் பிரதான காரணம் நீதிக்காகிய கல்வியைக் கல்லாமை, தெய்வத்தில் நம்பிக்கையில்லாமை, பொருளாசை, சமய ஒழுக்கத்தைக் கைக்கொள்ளாமை முதலியனவாகும்; இலங்கையிலே யுள்ள தமிழ் மாணவர்களுக்கு அக்காலத்திலே ஊட்டப்பட்டு வந்த நீதிநூற்கல்வி, சமய நூலறிவு, சமய ஒழுக்கம் இக் காலத்திற் போதிக்கப்படுவதில்லையாம்; பல மாணவர் பாவ புண்ணியங்கட்கிடையேயுள்ள பேதங்களையறியவியலாமல் தடுமாறுகிறார்கள்; உபாத்தியாயர்களுள்ளுஞ் சிலர் அங்கிலையில் நின்று தியங்குகிறார்களெனல் மிகையாகாது.

மதுபானமொழிந்து, தெய்வ நம்பிக்கை, சமய ஒழுக்கம், நீதிநூலறிவு முதலியன விருத்தியடைந்தாலன்றி இந் நாட்டிலே நரக்கொலை இல்லாதொழியும் இல்லையேற் குறையுமெனக் காத்திருத்தல் வீண்.

---

## திருச்சி ரேடியோ

* இசைத்தட்டு

**புதன் மே 30**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 திருக்கோயிலூர் எஸ். அலமேலு பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 ஆரம்பம்* 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 முகம்மது ஷரீப் ஸிதார் * 2 தமிழில் செய்தி 2 10 சிதம்பரம் ஆர் நாராயணசாமி பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 ஸ்ரீரங்கம் கோவிந்தஐயங்கார் வீணை 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 சிங்கள்சேட்டவை * 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 இசைச் செல்வம் ஆ இ ரே வித்வான்கள் 7 45 செய்திவிளக்கம் பேச்சு 8 நிரமோஹம் சிறுகதை 8 15 ஸ்ரீரங்கம் கோவிந்த ஐயங்கார் வீணை 8 30 மதுரை மணி ஐயர் * 8 45 ஆங்கிலத்தில் ... 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 திருக்கோயிலூர் எஸ் அலமேலு பாட்டு 10 முடிவு.

**வியாழன் மே 31**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 சீவலூர் டி எம் ஷண்முகசுந்தரம் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 காலை இசை 8 30 முடிவு.

1 வடிம்வுத் பேகம் * 1 15 பெண்ணுலகம் 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 மஹாராஜபுரம் விஸ்வநாதய்யர்* 2 தமிழில்செய்தி 2 10 கோயமுத்தூர் பி ஆர் ராமச்சந்திரராவ் வயலின் 2 45 முடிவு.

மாலை 5 30 கோயமுத்தூர் பி ஆர் ராமச்சந்திர ராவ்வயலின் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 பரிகாசப்பாடல்கள் 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் * 8 கிளோபார் அந்தமாக் தீவுகள் பேச்சு 8 15 ராகம் தானம் பல்லவி கே பி சிவானந்தம்பிள்ளை வீணை 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 சீவலூர் டி எம் ஷண்முகசுந்தரம் பாட்டு 10 முடிவு.

**வெள்ளி ஜூன் 1**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 எஸ் கே வெங்கடரமணன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு

1 ஆரம்பம் * 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 மன்னார்குடி கே சாவித்திரி அம்மாள் கோட்டுவாத்யம் * 2 தமிழில்செய்தி 2 10 எஸ் சரோஜினி பாட்டு 2 45 முடிவு

மாலை 5 30 ராஜபாளையம் வி செல்லையாபிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 சிங்கள்சேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 முன்னேற்றம் ஒலிச்சித்திரம் 7 45 சமது தபால்பெட்டி 8 எஸ் கே வெங்கடரமணன் பாட்டு 8 30 குரல்வளை * 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ராஜபாளையம் வி செல்லையாபிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.

---

## உலகம்பலவிதக்கதை

(முற்றொடர் — 6)

### "ஆரிடஞ்சொல்லி ஆறுவேன்?"

வந்த கமலாட்சி தன் பக்கலிலிருந்த வனசாட்சியைத் தலை தொடக்கம் காலடி வரையில் ஒருமுறை இருமுறை மும்முறை யவதானித்துப் பார்த்தாள்: "வனசா, இது என்ன கோலம்! அலங்காரவேண்டிய நேரத்திற் கும்பியபூட்போற் காணப்படுகின்றாய்! இப்படி வாடியிருக்கக் காரணமில்லையே! உனக்கு என்ன குறையம்மா" என்று வனசாவின் முதுகையும் முகத்தையுத் தடவிக்கொண்டு பரிவுடன் கேட்டாள்; வனசாவின் முகத்தில் வாட்டம் அதிகப்பட்டது; கண்களில் நீர் ததும்பியது; மனத்திலே தடுமாற்றம் பிறந்தது; சந்தோஷம் அதிகப்பட்டாலும் துக்கம் அதிகப்பட்டாலும் நினைத்த மாத்திரத்தே வாய்திறந்து பேசுதல் கஷ்டமென்பார்களே; வனசா பதில் சொல்ல முட்டுப்பட்டாள்; கண்ணீர் முத்துப்போலுதிர்ந்து, அவள் முகத்தைத் தடவிக்கொண்டிருந்த கமலாவின் புறங்கையிற் சிந்தியது; உடனே கமலாட்சியுஞ் சஞ்சலப்பட்டு, வனசாவின் கவலைக்குக் காரணம் அவளுள்ளத்தின் அடிப்படையிலே தடித்துக் குடிகொண்டிருக்கிறதென அயிர்த்தாள்; அவள் கண்ணீரைத் தன் மிருதுவான கரத்தால் மெல்லத் துடைத்தாள்; தேறுதல் கூறி வனசாவினுள்ளத்தைச் சிறிது ஆறுதலாக்கினாள்: "என்ன வனசா! உனைவந்து கண்டு மகிழ்ச்சியோடு மீண்டு போகலாமென் றெண்ணி வந்த எனக்குச் சோகரசத்தோடு கூடிய இந்தக் காட்சியையா அளிக்கின்றாய்; உள்ளதை உள்ளபடி உடனே எனக்குச்சொல்லடியம்மா; உன் கவலைப்பாரங் குறையும், என் மனத்திலுள்ள ஆவலும் ஒழியும்; கவலை வேண்டாம்" என்று பரிவுடன் சொல்ல, "அக்கா, நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை, உங்களுக்கல்லாமல் என்னுள்ளக் கவலை வேறெவருக்கும் வெளியிடத் தக்கதல்ல; கவலையென்னும் ஆற்றுப் பெருக்கில் அள்ளுண்டு போகும் என்னை மீட்கும்படி, அக்கா, நீங்களாக இந்த நேரத்தில் இங்கே வந்தீர்களென்று நான் எண்ணவில்லை; நான் பழிபோட்டுக்கொண்டிருக்கும் தெவி, என்னுத்தாள் கையெடுக்குந் தெய்வந்தான் உங்களை இந்த நேரத்தில் இங்கே கொண்டுவந்ததென்று நான் துணிகிறேன்; உங்களிடமல்லாமல் என்கவலையை ஆரிடஞ் சொல்லி ஆறுவேன், அக்கா" என்று கண்களில் நீர்ததும்பப் பரிவுடன் சொன்னாள்; "ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம் வனசா; கூசாமற் சொல்லு; இயன்றவரையிற் பார்ப்போம்" என்று கமலாட்சி தேற்றத்துடன் கேட்க, வனசா ஒருவாறு சொல்லத் துணிந்தாள்.

### 'வழுக்கி விழுபவர்க்கு ஊன்றுகோல் அகப்பட்டாற்போல'

"அக்கா, நீங்கள் தூரித்தலூரில் வசிக்கிறபடியினால், என் விவாக விஷயமாக நேர்ந்துள்ள குழப்பங்கள் உங்களுக்குத் தெரியா. நான் இரண்டொரு முறை என் விஷயத்தை உங்களுக்கு மெல்லத் தெரிவிக்கலாமென யோசித்தேன்; ஆனாலும் எழுத்திலே தெரிவிக்க மனந் துணியவில்லை அக்கா; அதிலுஞ் சொல்வதென்ன, உங்கள் அண்ணன் என் அருமையான மைத்துனர், ஏதோ காரணத்தினால் என்னை வெறுக்கவோ புறக்கணிக்கவோ தலைப்பட்டுக்கொண்டாரென அறியக்கிடக்கிறது. எங்கள் விவாகத்திற்கு அவர் தவணைவிடுகின்றார்; அதனை அறிந்த நேரந்தொட்டு என்மனம் ஏங்குகிறது. அவர் என்னை வாழ்க்கைத் துணையாகக் கொள்ளாவிட்டாலும், நான் வேறு ஆடவனுக்குப் பெண்டாட்டியாகப் போவதில்லை, தமிழ் மூதாட்டியர்களாகிய திலகவதியார், மங்கையர்க்கரசியார், காரைக்காலம்மையார் என்னுமுத்தமிகளின் வழித்தோன்றல்களாமே நாங்களும், ஆதலாற் பிழை யொன்றுஞ் செய்யப்போவதில்லை. மனந்தடுமாறப் போவதில்லை. அறவிபோற் காலங்கழிக்க எங்கள் இறைவியின அருள் கிடைக்கும்; அதனைவிட்டு எனக்கு எள்ளளவுங் கவலையில்லை. என் மைத்துனர் என்மேல் வெறுப்புக் கொண்டமைக்குக் காரணமென்ன என்பதை உள்ளபடி நான் அறிந்தாற்றான் என் மனம் ஆறும். எப்படி அறியலாம் என்று சதா சிந்தித்துக் கொண்டிருக்கும் நேரத்திலேயே வழுக்கிவிழுபவர்க்கு ஊன்றுகோல் அகப்பட்டாற்போல் நீங்களும் இந்த வேளையில் இங்கு வந்துசேர்ந்தீர்கள்" என்று கண்களின் நீர் சிந்த முறையிட்டாள். கேட்ட கமலாட்சி உள்ளந் திகைத்தபடியாற் பேசமுடியாமற் சிந்தனையோடிருந்தாள். (வரும்)

---

## கொரியா யுத்தம்

### சமாதானமாகுமா?

கொரியாவின் யுத்த நிலைமை இப்போது சமப்பட்டுவருகிறதெனவும், சமாதானத் தூதுப்பேச்சு ஆரம்பமாகுமெனத் திடமாய் நம்பலாமெனவும் அமெரிக்காவில் இலங்கை அரசாங்கப் பிரதிநிதியாயிருக்கும் திரு. G. C. S. கொறெயா கூறினாரா. திரு கொறெயா அமெரிக்காவிலிருந்து ஜேர்மனிக்கு ஒரு கூட்டத்திற் சமுகமளித்தற்குச் செல்லும் மார்க்கத்திலே லண்டனில் தங்கநேர்ந்தபோது இவ்வபிப்பிராயத்தைத் தெரிவித்தனராம்.

# அறிவித்தல்

சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வர ஆலயத்துக்கு, 1940 ஆ சித்தன்கேணி வாசிகளில் ஓர் சிலர் சேர்ந்து திரு. தி. கந்தையா என்பவரை முகாமைக்காரனாக நியமித்து கோவில் நிர்வாகத்தை நடத்தும்படிவிட்டார்கள். மேற்படியார் கோவில் முகாமைக்காரராக நியமனம் பெற்றகாலந்தொடக்கம் மேற்படி கோவில் பூசகருக்கும் முகாமைக்காரருக்கும் வேற்றுமை உண்டாகி கோட்டு வழக்கில் ஈடுபட்டு கோவில் நித்திய நைமித்தியங்கள் குன்றி வருவதைக் கண்ட மேற்படி கிராமத்திலுள்ள பெரும்பாலானோர், 1943 ம் ஆ ஓர் மாபெரும் கூட்டம் கூடி கோவில் நிர்வாகத்தை திரம்பட நடத்தும்முறையில் ஓர் 17 அங்கத்தினர் கொண்ட சபையை, "சித்தன்கேணி ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வர ஆலய சபை" என்ற நாமத்துடன் திறவி அன்று தொடக்கம் மாசி மீ 1951-ம் ஆ வரைக்கும் விதிப்படி அச்சுவேலி சிவ ஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்களின் கட்டளைப்படி செய்யவேண்டியவைகளை தவறாது செய்து ஒவ்வோர் வருடமும் மேற்படி கோவில் மண்டபத்தில் சபை பொதுமக்களை அழைத்து அவ்வவ் வருட வரவு - செலவுக் கணக்கு முதலிய அறிக்கையைச் சமர்ப்பித்து அவர்களின் அங்கீகாரம் பெற்று நடந்து வந்ததை சபையின் புத்தகங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். இவ்வாறு கோயில் நிர்வாகம் நடந்துகொண்டுபோகும்சமையத்தில் கோட்டில் வழக்காடிய முகாமைக்காரரும் பூசகருக்கும், தீர்ப்பு முறையே சாதகமாகவும் பாதகமாகவும் கிடைத்தது. முகாமைக்காரருக்குச் சாதகமான தீர்ப்புக்கிடைத்தவுடன், 26—2—51 ல் கோயிலின் அசைவுள்ள பொருள்களை முகாமைக்காரரிடம் ஒப்படைக்கிறதற்கு கோட்டார் ரூபா 5000க்கு பொறுப்புக்கு உத்தரவிட்டார்கள். ஆகவே கோட்டில் பொறுப்புக்கொடுத்து கோவில் பொருள்களை ஒப்பெடுத்து முகாமைக்காரருடன் கோட்டில் வாதாடிய பூசகரையே பூசைக்கு அமர்த்தி நடத்தி வருகின்றார். மேற்படி முகாமைக்காரரை மேற்படி சபையின் அங்கத்தவர்கள் (அனேகர் செல்வந்தர்) சபையுடன் சேர்ந்து கோவிலை ஒழுங்கான முறையில் நடத்தும்படி பலவிதமாக நயந்து கேட்டும் மேற்படி முகாமைக்காரர் கொஞ்சமேனும் இடங்கொடாதபடியினால் மேற்படி சபையார் தங்களின் எட்டாவது வருஷ வரவு - செலவுக் கணக்கு அறிக்கையை பொதுமக்களுக்குச் சமர்ப்பிக்கும் நோக்கத்துடன் கோவிலின் இரண்டாம் வீதி மண்டபத்தில் வழக்கம்போல் கூட்டம் வைக்க, முகாமைக்காரரை உத்தரவு தரும்படி கோர மேற்படியார் உத்தரவு கொடுக்க மறுத்தமையினால், சபையார் என்னசெய்வதென்றறியாமல் திகைக்க அதிஷ்டவசமாக மேற்படி ஆலய கீழை வீதியில் சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையாருக்குடையதாகிய வெறும் நிலத்தில் வைத்துக் கூட்டத்தை நடத்த சபை தீர்மானித்து பொதுமக்களுக்கு அறிவித்தல் கொடுத்து கூட்டம் நடக்க இருக்கும் சமயம் மணித்தியாலத்தில் சித்தன்கேணி வாசரும் பிறப்பு, இறப்பு, விவாக பதிவாளருமாகிய திரு. ச. சங்கரப்பிள்ளை என்பவர் மகாகணபதிப் பிள்ளையார் கோவிலின் முகாமைக்காறரும், வேறு பலரும்தான் என்று சொல்லி, மேற்படி சபை மகாகணபதிப்பிள்ளையாருக்குரிய நிலங்களில் பிரவேசிக்கப்படாதென்றும் கூட்டங்கள் நடத்தப்படாதென்றும் ஓர் முறையற்ற அறிவித்தலை சங்கானை பொலிஸ் அதிகாரிக்கு, திரு. சங்கரப்பிள்ளை நடராசா மூலம் கொடுத்தனுப்பி அங்கும் கூட்டம் வைக்காமல் தடுக்கவும், சபையின் அங்கத்தவரில் ஒருவராகிய திரு. மா. கனகசபாபதியின் சொந்தமான, கணேசவித்தியாசாலை மண்டபத்தில் கூட்டம் இனிது நடைபெற்றது. கீழ்க்காணும் உறுதியால் சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார்கோவில், பொது ஆலயம் என்பதை அறியலாம். திரு. ச. சங்கரப்பிள்ளை சங்கானை பொலிசுக்கு கொடுத்த அறிவித்தலையும் இதன் கீழ் பிரசுரிக்கிறோம்.

இங்ஙனம்

ச. க. ஆ. ப. சபையார்.

சங்கானை.
18-3-51.

சங்கானை
சப் இன்ஸ்பெக்டர் துரை அவர்கட்கு.
கனம் ஐயா!

உங்கள் கவனிப்புக்கு நான் அறியத்தருவது யாதெனில் சித்தன்கேணி சிவன்கோயிலுக்கு முன் எனது பார்வையிலிருக்கக்கூடிய சித்தன்கேணிப் பிள்ளையார் கோயிலுக்குரிய காணி ஒன்றுண்டு. அதில் அதேயிடத்திலுள்ள —— சில காவாலிப்பயல்கள் ஓர் கூட்டம் கூட எத்தனித்திருக்கிறார்களென அறிகிறேன். அந்த வளவுக்குள் அவ்வித கூட்டம் நடைபெற விட எனக்கு விருப்பமில்லை. மிஸ்டர் S. நடராசா பிள்ளை என்பவர் எனது மச்சான். இவர் என்னோடு சேர்ந்து கோவில் பராபரிப்புக்குரிய எனது ஏசண்டர். ஆனபடியால் உங்களைத் தயவாய்க் கேட்டுக் கொள்ளுவது ஒருவரையும் அந்த வளவுக்குள் கூட்டம் வைக்காதபடி தடுப்பதுமல்லாமல் அதற்கூடாக வேறு காணிக்குப் போய் கூட்டங்கூடும் நோக்கமாக வேறு பாதைகளை உண்டாக்காமலும் தடைசெய்து தரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
ச. சங்கரப்பிள்ளை
றிஜிஸ்டாரும்
மனேச்சரும்,

இது உண்மையான கோப்பி
M. Rosairo
எம். ரோசைரோ
பொலிஸ் இன்ஸ்பெக்டர்
சங்கானை
18-3-51.

Application No. 1017
16-5-51

இல: ௲௯௱௪௰௧.

வட்டுக் கிளக்கில் மளவராய முதலியார் சுப்பிரமணியர் பேரிற் தோம்பு பூண்ட பெரிய வளவு என்னும் நிலத்தில் பின்னுஞ் சொல்லும் பெயர்வழிகாறராகிய எங்கள் முன்னோராலும் பிறராலும் பொதுவாகக் கட்டுவிக்கப்பட்டதும் சகலரும் பராபரித்து வந்ததுமாகிய மகாகணபதிப்பிள்ளையார் கோவிலில் ௲௯௱௪௰ம் ஆடி மீ ௨௰௨ உ வைத்த கூட்டத்திற குறித்த கோவிலைச் சேர்ந்த ஷை சனங்களால் குறித்த கோயிற் காரியங்களை வரையறவாகவும் நிதார்த்தமாகவும் செவ்வையாகவும் நடத்தும்படி தெரிந்து ஏற்படுத்தப்பட்ட பிரதிநிதிகளான வட்டு கிழக்குக்குடி வயிரவநாதர் ஆறுமுகமும் ஷை வயிரவநாதர் இராமலிங்கமும் சங்கானை ஷை முத்துக்குமாரு செல்லப்பாவும் வட்டு கிழக்குக் குடி கணபதியார் சரவணமுத்துவும் ஷை காசிநாதர் சரவணமுத்துவும் ஷை காசிநாதர் விநாசித்தம்பியும் வட்டு மேற்குக் குடி முருகர் கதிரவேலுவும் வட்டு கிளக்குக்குடி வயிரவநாதர் சங்கரப்பிள்ளையும் சங்கானை குடி வீரகத்தி கார்த்திகேசரும் வட்டுக் கிழக்குக்குடி விசுவநாதர் தம்பிஞசரும் சங்கானை குடி ஆறுமுகம் சிற்றம்பலமும் வட்டு கிளக்குக்குடி ஷை சின்னத்தம்பி முருகேசனும் ஷை சுப்பிரமணியர் அருணாசலரும் ஷை கணபதியார் விநாசித்தம்பியும் ஷை சிற்றம்பலம் முருகேசரும் ஷை சின்னத்தம்பி மாரிமுத்துவும் சங்கானைகுடி கதிரேசர் ஆறுமுகருமாகிய நாங்கள் வட்டு கிழக்குக்குடி முருகேசர் சுப்பிரமணியர் ஷை உமசிவாயம் வேலாயுதர் ஷை காசிநாதர் வயித்திலிங்கம் ஷை கதிரவேலு சிவராமலிங்கம் ஷை ஆறுமுகம் குமரேசர் ஆகிய இவர்களைக் குறித்த கோயிலைச் சேர்ந்த சகல காரியங்களையும் நடப்பிக்கும்படி மானேசராக ஏற்படுத்தி எழுதிக் கொடுக்கும் அதிகாரப் பத்திரமாவது. குறித்த கூட்டத்தாரால் மேற்குறித்த திகதியில் ஏற்படுத்திய பிகளுற் சொல்லப்படும் விபரங்களை இவர்களும் இவர்களிற் பிற்காலம் இவர்களுடைய இடத்துக்கு வருபவர்களும் நடத்திவரவேண்டியது. க-வது இக்தக் கோயிலுக்கு இப்போதுடையதாயிருக்கிற கல்லுப் பொன் வெள்ளிகளைகளையும் பித்தளைச் செம்பு வெண்கலம் இரும்பு முதலியவைகளினால் உண்டாக்கப்பட்ட தட்டு முட்டுக்களையும் குடை கொடி ஆலவட்டம் முதலிய சாமான்களையும் மற்றும் அசைவுள்ள ஆதனங்களையும் அசைவுற்ற அசைவுள்ள ஆதனங்களைப்பற்றி இந்தக் கோவிலுக்கு முடிந்த உறுதிகளையும் கணக்குகளையும் குறித்த கோயிலினிடமாக இவர்கள் தானே பாதுகாத்து வைத்திருக்க வேண்டியது. உ-வது குறித்த கோயில் பூசகர் கணக்கப்பிள்ளை முதலிய உத்தியோகங்களுக்குப் போதிய திறமையும் கல்வியறிவும் யோக்கியமுமுள்ளவர்களை இவர்கள்தானே தெரிந்து நியமிக்கவும் இவர்களிற் சரியீனமானவர்களைத் தள்ளவும் மேலும் தங்கள் தங்கள் கடமைகளை நிதார்த்தமாகவும் செவ்வையாகவும் முடிப்பதற்குப் பொறுப்பாகக் குறித்த பூசகரிடத்திலும் கணக்கப்பிள்ளையிடத்திலும் போதிய பிணை வாங்கவும் இவர்களுக்கு அதிகாரமுண்டு. ௩-வது இவர்கள் வருடாந்தம் ஒரு செலவு வரவு கணக்கு விபரமாகவும் முறையாகவும் முடித்து எங்களுக்கல்லது அநேகப் பேருக்குக் காட்டிக் கையொப்பம்பெற்றுக் குறித்த இருப்பு சேமிக்கும் அறையிலிதைப் பாதுகாத்து வைக்கவேண்டியது. மேலும் தேவையென்று காண்கிற எல்லாச் சமையங்களிலும் இருப்பாயிருக்கிற பணம் மற்றுஞ் சகலத்தையும் இவர்கள் எங்களுக்கு அல்லது எங்களிலநேகப்பேருக்கு காட்டவேண்டியது. ௪-வது இவர்கள் கோயிலுக்கு நித்திய பாவிப்புக்காக அல்லது விசேஷ தினங்களின் பாவிப்புக்காக கோயிற் பூசகரிடம் கொடுக்கும் திருவாபரணம் முதலிய சாமான்களுக்கு பூசகரிடம் அவர் கையொப்பத்தோடு கொடுத்த ஒரு கணக்குவாங்கிக் கூடிக்கொண்டு அவைகளை வாங்கும்போது கணக்கிலவர் எழுதிக் கையொப்பமிட்டு வாங்கவேண்டியது ௫-வது

தொடர்ச்சி 4-ம் பக்கம்

M. 28—29-5-51

உ

## திருமண விஞ்ஞாபனம்

### கனக சபாபதி — ஜீவரத்தினம்

கொழும்பு, பகிரங்க வேலைப்பகுதி தலைமைஸ்தானத்தில் கடமைபார்ப்பவராகிய திரு எம். எஸ். கனகசபாபதிக்கும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யாசிரியராகிய ஐஸ். பி. இராசையாவின் புதல்வி திருவளர்செல்வி ஜீவரத்தின (நிர்மலேஸ்வரி) அம்மாளுக்கும் இந்த வைகாசி மாசம் 18 உ (1-6-51) வெள்ளிக்கிழமை காலை 6½ மணிவரையில் நிகழும் சுபமுகூர்த்தத்தில் வண்ணார்பண்ணை மேற்கிலுள்ள 'சாசானந்தகிரி' என்னும் மணமகளில்லத்தில் இறைவன் திருவருளை முன்னிட்டு விவாகம் சிறப்புற நடைபெறும். அன்று பிற்பகல் 4 மணி தொடக்கம் இரவு 8 மணிவரையும் உபசாரணைக் கொண்டாட்டம் நடைபெறும். சுற்றமித்திராயுள்ளவர்கள் வரவை எதிர்பார்த்திருக்கின்றோம்.

[பிரத்தியேகமான விவாக அழைப்புப்பத்திரம் அனுப்பப்படவில்லை]

'சாசானந்தகிரி'
வண்ணார்பண்ணை

மணமகளின் பெற்றோர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு 1 வேலுப்பிள்ளை பொன்னையா வழக்காளி

எதிராக

வட்டுக்கோட்டை கிழக்கு 1 வேலுப்பிள்ளை அரியம் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் 6804-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் முதலாம் இரண்டாம் துண்டுக்காணிகளை 1951 ஆ ஆனி மீ 9 உ சனிக்கிழமை பிற்பகல் 4½, 5 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

1. வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கு இறை காவோடை கெற்பரப்பு 2 குளி 11½ வான் பயிர் செய்பயிர்களும் வடகிழக்கிலிருக்கும் கிணற்றில் பங்கும் துர்வை வழி வாய்க்காலும் எல்லை கிழக்கு அப்புத்துரை பெண் செல்லம்மாவுக்குரிய ஆதனம், வடக்கு கீழே சொல்லப்படும் ஆதனம், மேற்கு காலஞ்சென்ற கந்தர் கணபதிப்பிள்ளையின் உருமைக்காரருடைய ஆதனம், தெற்கு நாராயணர் நாகலிங்கத்துக்குரிய ஆதனம். இந்தக் காணியிலிருந்து பாதை கிழக்கு எல்லைப்பக்கமாக எதிராளிக்குரிய வடக்கு எல்லைக் காணியிலிருந்து வடக்குப்பக்கமாகவும், வடகிழக்கிலிருந்து கிழக்குப் பக்கமாக இதடங்கலும் விற்கப்படும்.

2. வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கு இறை காவோடை நிலப்பரப்பு ஐந்து வடகிழக்கிலிருக்கும் கிணற்றில் பங்கும் துர்வை வழி வாய்க்காலும், எல்லை கிழக்கு எதிராளிக்குரிய ஆதனம், வடக்கு கந்தர் மயிலுவுக்கும் கந்தர் கார்த்திகேசுவுக்குமுரிய ஆதனங்கள், மேற்கு கதிரவேலு நாகலிங்கத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு காலஞ்சென்ற கந்தர் கணபதிப்பிள்ளையின் உருமைக்காறர்களின் ஆதனமும் மேலே சொல்லப்படும் ஆதனமும் நடைபாதை கிழக்கு எல்லைக் காணியிலிருந்து வடக்குப் பக்கமாக கிழக்கு ஒழுங்கைக்குப் போக, இதடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்
கொம்மிசனர்

சித்தன்கேணி
10—5—51.

M 24 29—5—51.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு
1. கன்னியப்பா பராசசிங்கம்
2. பெண் முத்துப்பிள்ளை
வழக்காளி

இல 6662

எதிராக

வட்டுக்கோட்டை கிழக்கு
1. வேலுப்பிள்ளை அரியம்
வட்டுக்கோட்டை மேற்கு
2. முத்துச்சாமி குலக்கொழுந்து
3. முத்துச்சாமி முருகுப்பிள்ளை
எதிராளி
4. வேலுப்பிள்ளை பொன்னையா

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் 6662-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1951 ஆ ஆனி மீ 9 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கு இறை காவோடை நிலப்பரப்பு 5 ஐந்து வான்பயிர் செய பயிர்களும், எல்லை கிழக்கு கந்தர் கார்த்திகேசுவுக்கும் வேலுப்பிள்ளை அரியத்துக்குமுரிய ஆதனங்கள், வடக்கு கந்தர் மயிலுவுக்குரிய ஆதனம், மேற்கு கதிரவேலு கைம்பெண் வள்ளிப்பிள்ளைக்குரிய ஆதனம், தெற்கு கந்தர் கணபதிப்பிள்ளைக்குரிய ஆதனம், வடகிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றில் ½ பங்கும் துர்வை வாய்க்காலும். இதடங்கலும் விற்கப்படும்

க. ஆறுமுகம்
கொம்மிசனர்.

சித்தன்கேணி
10—5—51

M 25. 29—5—51.

# அறிவித்தல்

3-ம் பக்கத் தொடர்ச்சி

வருடாந்தத்திலிருக்கும் மிகுதிப் பணத்தையும் கோயிலுக்குத் தேவையற்ற சாமான்களையும் இம்மாத்திரமென்று கண்டு திருப்பணிகளிலும் ஆதனங்களை திருத்துவதிலும் ஆதனங்கள் சம்பாதிப்பதிலும் ஞாயமான பிரகாரம் செலவழித்துச் சகலமும் எழுத்திற் பதிந்து வைத்திருக்கவேண்டியது மேலும் தருமகர்த்தாக்கள் கோயில் சுயத்துக்காக முதலிட்ட பணங்களைப் பெலப்பான போதிய சட்டின் பேரில் வட்டியில் அல்லது ஆதனம் சம்பாதிப்பதிலிட்டு அத் தருமகர்த்தாக்கள் சொக்கத்தை நிறைவேற்ற வேணடியது. மேலும் கோயிலாதனங்களைச் செய்கைவிடுவிக்கத் திருத்துவித்துக் குத்தகை வாரத்துக்குக் கொடுக்க அவைகளில் வேண்டிய பயிர்கள் பூமரங்கள் முதலியன வைத்து விருத்தியாக்க கோயில் சுயத்துக்காகப் பராபரித்து வர இவைகளின் வரவு செலவுக் கணக்கு வைக்க இவர்கள் பொறுப்பாளிகளாயிருக்க வேண்டியது. ௬-வது, கோயிலுக்குரிய அசையுள்ள அல்லது அசையற்ற ஆதனங்களைக் கோயில் பூசகர்கள் கணக்கப்பிள்ளை மற்றும் வேலைகாறரில் ஆதாவது அபகரித்து எடுத்தால் அல்லது வேணுமென்று பழுதுசேதம்பண்ணினுல் அல்லது அப்படிச் செய்வதற்கு ஒருவருக்கொருவராவது பிறருக்காவது துணை செய்தால் அல்லது அவர் கடன் செய்ய வேண்டி கடன்களைச் செய்யமாட்டோமென்ருல் அல்லது அசட்டைபண்ணினுல் அல்லது தவறினுல் அப்படிச் செய்த குற்றத்தினிமித்தம் அவர்கள் கோயில் சுயத்துக்காகத் தகுந்த அபராதமிறுக்கும்படி செய்யவும் அல்லது வேணுமென்று கண்டால் அவர்களை நிறுத்தி வைக்கவும் தள்ளவும் இவர்களுக்கதிகாரமுண்டு. மேலுங் குறித்த கோயில் பூசகர் முதலிய உத்தியோகஸ்தர் மரணித்த நிமித்தம் அல்லது மறுகாரணத்தினிமித்தம் அவ்வேலை அவகாசமாய் வரும்போது அந்தந்த வேலைகளுக்குத் தகுந்தவர்களை இவர்கள் நியமிக்கவும், மேலும் தேவையானுல் குறித்த உத்தியோகர்களுக்குப் பதிலாட்களை நியமிக்கவும் இவர்களுக்கதிகாரமுண்டு. ௭-வது, இந்த அதிகாரப்பத்திரத்தில் விபரித்துச் சொல்லப்படாத காரியங்களைக் கோயில் சுயத்துக்காகச் செய்யப்பட வேண்டியதென்று காலத்துக்குக்காலம் இவர்களுக்குத் தோற்றப்படுபவைகளையும் இவர்கள் தானே முறைப்படி செய்வித்து கோயில் திருப்பணிகளையும் வருமானங்களையும் ஆஸ்திகளையும் விருத்தியாக்கி நடபடிகளை நிதானப்படுத்தி எழுதிப் பதிவு பண்ணி வரவேண்டியது. ௮-வது, இந்த அதிகாரப்பத்திரப் பெலப்பைக்கொண்டு கோயிற் காரியத்தல் எவ்வித வியாச்சியங்களையும் நீதித்தலங்களில் கோயில் சுயத்துக்காக நடத்தவும், கோயில் சுயத்துக்காகவேண்டிய பொருத்தங்கள் கட்டுப்பாடுகள் உறுதிகள் முடிக்கவும் முடித்துக் கொடுக்கவும் முடிப்பிக்கவும் அதிகாரமும் உரித்தும் இவர்களுக்குடையதாயிருக்கவேண்டியது. ௯-வது, இந்த அதிகாரப்பத்திரப் பெலப்பைக் கொண்டு செலுத்த வேண்டிய சகல தத்துவங்களையும் ஏற்படுத்திமுடிக்கவேண்டிய சகல முறைகளையும் ஒழுங்குகளையும் செய்யவேண்டிய மற்றும் எவ்வகைப்பட்ட காரியங்களையும் இவர்கள் யாவரும் அல்லது அதிகபேர் கூடிச் செய்யவேண்டியது ௰-வது, மேற் சொல்லிய கோயிலில் அசையுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களைக் குறித்த மானேசர்கள் அபகரித்தால் அல்லது வேணுமென்று கேடு பண்ணினுல் அப்படிச் செய்வதற்கு ஒருவருக்கொருவராவது குறித்த கோயில் பூசகர் கணக்கப்பிள்ளை முதலிய கோயில் உத்தியோகஸ்தருக்காவது பிறருக்காவது துணை செய்தால் அல்லது செய்யவேண்டிய கடமைகளை நிதானமாகவும் முறையாகவும் செய்யமாட்டோமென்ருல் அல்லது அசட்டைபண்ணினுல் அல்லது தவறினுல் அப்படிச்செய்த குற்றத்தினிமித்தம் இவர்கள் கோயில் சுயத்துக்காக அபராதமிறுக்கும்படி செய்யவும் அல்லது வேணுமென்று கண்டால் இவர்களை நிறுத்திவைக்கவும் அல்லது தள்ளவும் மேலும மானேசரில் ஆராவது மரணித்த நிமித்தம் அல்லது மறுகாரணத்தினிமித்தம் இவ்வேலை அவகாசமாய் வருங்காலத்தில் இதற்கு வேறொருவரை நியமிக்கவும் எங்களுக்கு அல்லது எங்களிலதிகப் பேருக்குச் சகல அதிகாரமுடையதென்று இத்தால் வெளியாக்கப்படுத்துகிறோம். ௰௧-வது, மேற சொல்லிய அதிகாரம் இயாவக்கும் இவர்கள் முழு உரித்துடையவர்களாயிருக்கிறுர்கள் என்பதற்கு ஆதரவாய் இச் சாதனத்தை நாங்களும் குறித்த மானேசர்களும் சம்மதகாறராகக் கையெழுத்து வைத்து இவ்வுறுதி எழுதினதற்குச் சாட்சி வட்டுக்கிழக்குக் குடி சவரிஞர் கனகசபை டிை சங்கரப்பிள்ளை சபாபதி டிை சுப்பர் மாரிமுத்து இவர்கள் சாட்சியாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கு நொத்தாரிசு வயித்தியஞர் அருணாசலம் முகதாவில் குறித்த கோயிலிடமாக இருந்தெழுதி கை யொப்பம் வைக்கிறோம், ௲௮௱௮௰௪-ம் ஆ சித்திரை௴ ௨௨.

சாட்சி. கனகசபை (ஒப்பம்)

சாட்சி. ச. சபாபதி (ஒப்பம்)

சாட்சி. சு. மாரிமுத்து (ஒப்பம்)

நொத்தாரிசு

ஒப்பம் விளக்கமில்லை.

ஆறுமுகம் (ஒப்பம்)
ஒப்பம் விளக்கமில்லை
மு. செல்லப்பா (ஒப்பம்)
ஒப்பம் விளக்கமில்லை.
சரவணமுத்து (ஒப்பம்)
ஒப்பம் விளக்கமில்லை.
ஒப்பம் விளக்கமில்லை.
சங்கரப்பிள்ளை (ஒப்பம்)
கார்த்திகேசர் (ஒப்பம்)
தம்பிஞர் (ஒப்பம்)
சிற்றம்பலம் (ஒப்பம்)
முருகேசன் (ஒப்பம்)
(Sgd) S. Carunagarar.
சின்னத்தம்பி (ஒப்பம்)
முருகேசர் (ஒப்பம்)
ஒப்பம் விளக்கமில்லை.
ஒப்பம் விளக்கமில்லை.
மு. விளக்கமில்லை (ஒப்பம்)
விளக்கமில்லை (ஒப்பம்)
கா. வயித்தியலிங்கம் (ஒப்பம்)
விளக்கமில்லை (ஒப்பம்)
விளக்கமில்லை (ஒப்பம்)

மேலே கண்டிருக்கிற சாதனத்தைச் சொல்லப்பட்ட வயிரவஞர் ஆறுமுகத்துக்கும் வயிரவஞர் இராமலிங்கத்துக்கும் முத்துக்குமாரு செல்லப்பாவுக்கும் கணபதியார் சரவணமுத்துவுக்கும் காசிஞர் விஞசித்தம்பிக்கும் முருகர் கதிரவேலுவுக்கும் வயிரவஞர் சங்கரப்பிள்ளைக்கும் வீரகத்தி கார்த்திகேசருக்கும் விசுவஞர் தம்பிஞருக்கும் ஆறுமுகம் சிற்றம்பலத்துக்கும் சின்னத்தம்பி முருகேசனுக்கும் சுப்பிரமணியம் கருணாகரருக்கும் கணபதியார் விஞசித்தம்பிக்கும் சிற்றம்பலம் முருகேசருக்கும் சின்னத்தம்பி மாரிமுத்துவுக்கும் கதிரேசர் ஆறுமுகத்துக்கும் முருகேசர் சுப்பிரமணியருக்கும சமசிவாயம் வேலாயுதருக்கும் காசிஞர் வயித்திலிங்கத்துக்கும் கதிரவேலு சிவஇராமலிங்கத்துக்கும் ஆறுமுகம் குமரேசருக்கும் பிரசித்தநொத்தாரிசு வயித்தியஞர் அருணசலமாகிய எனுல் இதிற் கையொப்பம் வைத்திருக்கிற சாட்சிக்காறர் வட்டுக் கிழக்குக்குடி சவரிஞர் கனகசபையையும் டிை சங்கரப்பிள்ளை சபாபதியும் டிை சுப்பர் மாரிமுத்துவுமாகிய இவர்கள் முனபாக வாசித்து விளக்கப்படுத்தப்பட்ட தென்றும் எனக்கிவர்களைத் தெரியுமென்றுஞ் சாதனத்திற் சொல்லப்பட்ட ஆறுமுகமும் இராமலிங்கமும் செல்லப்பாவும் சரவணமுத்துவும் சரவணமுத்துவும் விஞசித்தம்பியும் கதிரவேலுவும் சங்கரப்பிள்ளையும் கார்த்திகேசரும் தம்பிஞரும் சிற்றம்பலமும் முருகேசனுக்கும் கருணாகரருக்கும் விஞசித்தம்பியும் முருகேசரும் மாரிமுத்துவும் ஆறுமுகரும் சுப்பிரமணியரும் வேலாயுதரும் வயித்திலிங்கமும் சிவராமலிங்கமும் குமரேசருஞ் சொல்லப்பட்ட சாட்சிகளும் என்முன்பாகவும் முகதாவிலிருந்த சாட்சிக்காறர் ஒவ்வொருவர் முன்பாகவும் சாதனத்திற் சொல்லப்பட்ட கோயிலிடமாக இருந்து ௲௮௱௮௰௪-ம் ஆ சித்திரை௴ ௨௨ ஒரே சமயத்திற கையொப்பம் வைத்தாரகளென்றுஞ் சொல்லப்பட்ட நொத்தாரிஸாகிய நானிதைக்கொண்டத் தாட்சிப்படுத்துகிறேன். இந்த உறுதிச் சாதனத்தினிலைப் பிரதி யஞரு முத்திரையும் ஆதாரப் பிரதி ௧ ரூபா முத்திரையையும் கொண்டிருக்குதென்றும் இந்த முத்திரை நொத்தாரிஸ் ஆகிய என்னுற் கொடுபட்டதென்று பின்னுமுறுதிப்பண்ணி அத்தாட்சிப்படுத்துகிறேன். ௲௮௱௮௰௪ - ம் ஆ சித்திரை௴ ௨௨"

ஒப்பம் விளக்கமில்லை

வயித்தியஞர் அருணசலம்
பிரசித்த நொத்தாரிசு (ஒப்பம்)

M 26 29—5—51.


# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட மூலதனம் | | 7, 500, 000-00 |
| கொடுக்கவிருக்கும் | ,, | 4, 500, 000-00 |
| கொடுபட்ட | ,, | 4,500, 000-00 |
| நிலைதரமான சேமநிதி | | 3, 000, 000-00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்டல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.
லண்டன் காரியாலயம்:- 4-6-8 ஹூட் கேட் கில்லண்டன்.E. C. 4.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை,(கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழையநகரமண்டபம்),வதுளை மட்டக்களப்பு.
யாழ்ப்பாணத்துக்காரியாலயம்:-242ஆஸ்பத்திரிரேட்,யாழ்ப்பாணம்

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

நடைமுறைக் கணக்கு: இலங்கையில் (திருக்கோணமலை வதுளை மட்டக்களப்பு ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப்பெற்றுக் கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்: ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 வீதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு: இதற்கான வீதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்: அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று: இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.
பிறநாட்டுவிவகாரப்பகுதி: ஜீ.ஓ.எச்.கட்டிடம், யோர்க் வீதி,கொழும்பு.

இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்,

L P. N சிங்கம்
ஏஜெண்டு



வில்லிபாரதம்
புட்ப யாத்திரைச் சருக்கம்

பண்டிதர்
ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள் விளக்கவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951-ம் 52-ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸி) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது '2-ம் பதிப்பு; இலேஸ் காகிதத்தில் தெளிவான எழுத்தில் அச்சிடப்பெற்றது, விலை ஒன்றேகால் ரூபா.

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply to;
PANDIT V. T. SAMBANHAN
Vannarponnai, Jaffna

M 17 15, 22, 29-5-51



L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.



இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி,
யாழ்ப்பாணம்.

உண்மையே
உயர்த்தும் ஏணி


Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai; Jaffna, on Tuesday May 29, 1951